பக்கங்கள்: 09 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 29 வியாழக்கிழமை 11.06.2020 கதிர் 86

**காரைதீவுப் பிரதேச சபையில் தொல்லியல் ஜனாதிபதி செயலணிக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றல்**

(முழுமையுமான செய்தி 09 ஆம் பக்கத்தில்)

# போராளிகளையும் இணைத்து பயணிக்கவேண்டும் தமிழரசு

## தீர்வுக்கான எங்கள் போராட்டத்துக்கு அவர்களின் பங்களிப்பு அத்தியாவசியம் என்கிறார் சுமந்திரன்



**யாழ்ப்பாணம், ஜூன் 11**

**எங்கள் இனத்தின் விடிவுக்கா கப் போராடிய முன்னாள் போராளிகள் ஒரு கால கட்டத்தில் ஒரு வழிமுறையைப் பயன்படுத்தினார்கள். அந்தப் போராட்டம் இப்போது நிறைவுக்கு வந்துள்ளது.**

**தீர்வை நோக்கிய எமது இன்றைய போராட்டத்துக்கு அந்த முன்னாள் போராளிகளின் பங்களிப்பு மிக அத்தியாவசியமானது. ஆகவே அர்ப்பணிப்புடைய அவர்களையும் தமிழரசுக் கட்சியில் இணைத்துக்கொண்டு நாங்கள் பயணிக்கவேண்டும்.இந்த நிலைப்பாட்டில்தான் நான் இப்போதும் உள்ளேன்.**

2

## ஜூலை 13 முதல் 16 வரை தபால் வாக்களிப்பு

கொழும்பு, ஜூன் 11

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புத் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 13ஆம், 14 ஆம், 15ஆம், 16 ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிப்பு இடம்பெறும் எனத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## யாழ்ப்பாணம், கம்பஹா வாக்குச் சீட்டுகளே உள்ளதில் நீளமானவை

யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு அச்சிடப்படவேண்டியவாக்குச்சீட்டுகள் மிக நீண்டதாக ( 233) அமையும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வன்னி, மட்டக்களப்பு, கொழும்பு மற்றும் திகாமடுல்ல மாவட்டங்களுக்கு அச்சிடப்படவேண்டிய வாக்குச் சீட்டுகள்

2

## தீர்வைப் பெற்றுத் தருவது எமது தலையாய கடமை அதில் எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை

### இப்படிச் சொல்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தீர்வைப் பெற்றுத் தருவது எமது தலையாய கடமை. அதில் எந்த விட்டுக்கொடுப்புமில்லை என்று தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

யாழ்ப்பாணத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் நாடாளுமன்றம் போய் என்ன செய்ய போகிறோம்? கடந்த 5 வருடத்தில் செய்யாததை இனிச் செய்யப் போகிறோமா எனக் கேட்கிறார்கள். 5 வருடத்தில் நிறைய செய்யப்பட்டுள்ளன. நாம் நாடாளுமன்றம் போகும்போது,

2

## தமிழர்கள் விரும்பும் அரசமைப்பை நிறைவேற்ற கோட்டாவுக்கு ஆதரவு!

### யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் அறிவிப்பு

இனப்பிரச்சினை தீர்வுக்காக நீண்ட தூரம் பயணித்துள் ளோம். அதற்கான புதிய அரசமைப்பு நகல் வரைவு கூட நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த முயற்சியை நிறைவுக்குக் கொண்டு வர ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவைப்பட்டால், அந்தத் தீர்வு தமிழர்களின் விருப்பங்களைத் தீர்க்குமாகஇருந்தால்நிச்சயம்ஆதரவுவழங்குவோம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் மைத்திரி - ரணில் ஆட்சியை உருவாக்கியபோதுகூட ஆட்சியில் இணையவில்லை.

2

## யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் மார்க்கம் நகரில் படுகொலை

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கனடாவின் மார்க்கம் நகரில் கொலை செய்யப்பட்டார் என்று அந்த நாட்டுப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

2

## 50 கிராம் ஹெரோயினுடன் குடாநாட்டில் பெண் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 11

50 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 39 வயதுப் பெண் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

2



# வடக்கு ஆலயங்களுக்கு சுகாதார கட்டுப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வணக்கத்தலங்களில் பின்பற்றப்பட வேண்டிய கொரோனா தடுப்பு சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை மத்திய சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்த விதிமுறைகளை கடைப்பிடித்து நாளை வெள்ளிக்கிழமை வணக்கத் தலங்களில் சமய வழிபாடுகளைக் கடைப்பிடிக்க முடியும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வணக்கத் தலங்களில் ஆகக் கூடுதலாக 50 பேர் மட்டுமே சமய நிகழ்வுகளில் பங்குபற்ற அனுமதிக்கப் படுகின்றது.

வழிபாடுகள் நடாத்தும் போது இருவருக்கிடையே யான இடைவெளி ஒரு மீற்றர் இருப்பது கட்டாயமாகும்.

ஆலயத்தின் வாசலில் கைகழுவும் வசதிகள் கட்டாயம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். உள்நுழையும் வாசல்களை குறைப்பதனால் மக்களின் உள் நுழைதலைக் கட்டுப்படுத்தலாம்.

வழிபாட்டுத் தலத்தில் கடமையாற்றும் சமயப் பெரியார் எவராவது சுகவீனமுற்றிருந்தாலோ அல்லது காய்ச்சல், இருமல், தொண்டைநோ போன்ற அறிகுறிகள் காணப்பட்டாலோ அவர் உடனடியாக மருத்துவ சிகிச் சைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அவர் பக்தர்களுடன் தொடர்பு கொள்வது முற்றாகதடுக்கப்பட வேண்டும்.

நோய் அறிகுறிகள் காணப்படும் பக்தர்களும் ஆலயத்திற்கு செல்வதை தவிர்த்தல் வேண்டும்.

தேவையேற்படும் பட்சத்தில் வணக்கத் தலத்திற்குள் உள்நுழையும் பக்தர்களின் எண்ணிக்கையை அருகிலுள்ள பொலிஸாரின் உதவியுடனும் கட்டுப்படுத்தலாம்.

அனைத்துப் பக்தர்களும் முகக் கவசம் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

ஆலயத்தின் சமயப் பெரியாரும் பக்தர்களைச் சந்திக்கும் போது முகக் கவசம் அணிந்திருத்தல் அவசியமானதாகும்.

சமய வழிபாடுகளை வீடுகளில் செயற்படுத்துவதற்கு பக்தர்களை ஊக்குவிக்கவும்.

ஒரே குடும்பத்தினர் வழிபாடுகளோ தானங்களோ செய்யும்போது குடும்ப உறுப்பினர்கள் பங்குபற்றுதல் மட்டுப்படுத்தப்படுவதுடன் அனைத்து சுகாதார விதிமுறைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

உணவு வகைகளோ, தீர்த்த நீரோ அல்லது பிரசாதமோ எக்காரணம் கொண்டும் வழங்கப்படுதல் ஆகாது.

மேலும் இவ்வகையான உணவு வகைகளையோ புனித நீரினையோ பக்தர்கள் தாமாக எடுக்கும் வகையில் ஆலயத்தின் உள்ளேயும், வெளியிலும் வைத்தல் ஆகாது.

திருப்பலியின் போதான தேவநற்கருணை வழங்கும் செயற்பாட்டின்போது நாக்கில் வைப்பதற்குப் பதிலாகக் கைகளில் வைப்பது விரும்பத்தக்கது. பக்தர்கள் தேவநற்கருணையை உடனடியாகவே உள்ளெடுக்கவேண்டும். மேலும் திருப்பலியின்போது வைன் பரிமாறுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளின்போது குருமுதல்வரானவர் முகக் கவசம் அணிந்திருத்தல் அவசியமானதாகும்.

பொதுமக்கள் சமயத் தலங்களில் இயலுமான அளவு குறைந்த நேரத்தைச் செலவுசெய்வதுடன் தேவை யற்ற விதத்தில் உலாவுவதைத் தவிர்க்க வேண்டும்.

சமயத் தலங்களுக்கான யாத்திரைகளும்குழுவாகத்தரிசித்தலும்தற்போதைய நிலமைகளில் அனுமதிக் கப்படுவதில்லை. இதற்கு மாற்றீடாக தங்களுக்கு அண்மையிலுள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு தங்களது குடும்ப உறுப்பினர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சென்றுவரலாம்.

மேற்குறித்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அனைத்துவிதமான சுகாதார பாதுகாப்பு நடை முறைகளையும் பின்பற்றுவது மிகவும் கட்டாயமான தாகும் - என்றுள்ளது.

## தீர்வைப் பெற்றுத் தருவது எமது தலையாய கடமை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது அரசியல் அபிலாஷையைத்தான் வலியுறுத்து வோம்.

தீர்வைப் பெற்றுத் தருவது எமது தலையாய கடமை. அதில் எந்த விட்டுக்கொடுப்புமில்லாமல் செய்வோம்; பெற்றுத் தருவோம். அதற்காக அரசியல் தீர்வு வரும்வரை மக்களின் வாழ்வு எப்படியாவது இருக்கட்டும் என விடவும் மாட்டோம். கடந்த அரசின் காலத்திலும் நாங்கள் சில முன்னெடுப்புக்களைச் செய்தோம். அரசிலிருந்து பணத்தைப் பெற்று அபிவிருத்தித் திட்டங்கள் செய்தோம்.

ஒரு கட்டமைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்திற்குள் செல்லவேண்டிய தேவையுள்ளது. விசேடமாகப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். பொருளாதாரம் எப்படியிருக்கவேண்டுமென்றால், இளையவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் பொருளாதாரமாக அது இருக்கவேண்டும்.

இது இலங்கை முழுவதுமுள்ள பொருளாதார திட்டமென்றாலும், வடக்கு - கிழக்கில் விசேடமாக உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தவேண்டும். இது அத்தியாவசியமானது. இது பற்றித் தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிடுவோம்.

எமது மக்கள் தொடர்ந்து இங்கு வாழ்ந்தாலே எமது இருப்பு பாதுகாக்கப்படும். இளையவர்கள் வேலையில்லையென வெளிநாடு சென்றால், இனப் பிரச்சினைத் தீர்வுக்கே தேவையில்லாத நிலையேற்படலாம். மக்களின் வாழ்க்கை கட்டியெழுப்பப்பட வேண்டும், இளையவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும். மக்கள் இங்கு வாழ வழியேற்படுத்தப்படவேண்டும். அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. புலமையாளர்களுடனும் பேசியுள்ளோம்.

கொரொனா போகும்போது, ஜனநாயகமும் போய்விடும் என்ற பயமிருந்தது. இதனால்தான் தேர்தல் நடத்தப்படவேண்டுமென விரும்பினோம். தேர்தல் சுயாதீனமாக இருக்கவேண்டும். தேர்தல் நடத்தப்படவேண்டும். நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். ஆனால் தேர்தல் நடத்தப்படும் முறை குறித்த மக்களின் அச்சத்தை ஆட்சியாளர்கள் நீக்க வேண்டும்.

புதிய ஜனாதிபதி எடுத்துள்ள சில முடிவுகள், அவரது ஆட்சி எப்படியாக அமையுமென்பதைக் காண்பிக்கிறது. கிழக்கில் மிகப் பெரும்பான்மையாகத் தமிழர்கள், முஸ்லிம்கள் இருந்தாலும், கிழக்கு தொல்பொருள் செயலணியில் தமிழர்கள், சிங்களவர்கள் இணைக்கப்படவில்லை. அகழ்வாராய்ச்சிக்குப் பெயர் பெற்றவர் எனசொல்லப்படும்எல்லாவலமேதானந்த தேரர் அதில் உள்ளார். அவரது கருத்து, இந்த பிரதேசங்கள் முழுவதும் சிங்கள பௌத்த பிரதேசங்கள், அவர்களின் மேலாதிக்கம் பேணப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளவர். இராணுவ அதிகாரிகளும் உள்ளனர்.

இந்தச் செயலணி தமிழர், முஸ்லிம்களையும் நியமிக்கும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளாராம். அவர் என்ன சொல்ல வருகிறார் என்றால், எங்களை போன்றவர்கள் எல்லோரும் உங்களுக்கு விசுவாசமானவர்கள்தானே. நாங்களும் இருக்கின்றோம்தானே. எங்களிலும் உங்களுக்கு நம்பிக்கையில்லையா? நீங்கள் சொல்வதைத்தானே நாங்கள் செய்வோம். எங்களில் யாரையாவது நியமித்திருக்கலாம்தானே என்று அவர் சொல்கிறார். அந்தக் கடிதத்தால் எந்த பலனுமில்லை.

ஒழுக்கத்தைப் பேண இன்னொரு செயலணி, இராணுவ அதிகாரிகளை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள், மதத் தலங்கள் தவிர்த்து, ஒழுக்கத்தைப் பேண, ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர்களாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்படியாக இராணுவ மயமாக்கல் நடக்கிறது. பிரதிநிதித்துவ ஜனநாயகம் இல்லாவிட்டால் இவர்கள் ஒருவருக்கும் பதில் சொல்ல முடியாத, பொறுப்புக்கூறும் நிலை இல்லாமல்போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. தென்னிலங்கையில் அவர்கள் பலமாக இருந்தாலும், எமது பிரதேசங்களில் நாம் எமது இருப்பைப் பாதுகாக்க வேண்டும்.

அதனால், முன்னெப்பொழுதும் இல்லாத விதமாக ஓர் அணியாக - தமிழ் மக்கள் தமது பிரதிநிதித்துவத்தைக் காட்ட வேண்டிய தேவையுள்ளது. பிரிந்து பல அணிகளாகப் போனால் அது எம்மைப் பலவீனப்படுத்தும். இன்றைக்கு இருக்கும் கட்சிகள், அணிகளில் வடக்கு, கிழக்கிலுள்ள மக்களை ஓரணியாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே உள்ளது. அதனால் மாற்று அணிக் கோசங்களைப் புறக்கணித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றியடையச் செய்ய வேண்டும்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகனின் மறைவிற்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்து கொள்கிறோம் - என்றார்.

## தமிழர்கள் விரும்பும் அரசமைப்பை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல் ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சியிலும் இணையமாட்டோம். ஆனால் தேவைப்பட்டால் வெளியிலிருந்து ஆதரவளிப்போம்.

ஜனவரி 3ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, புதிய அரசமைப்பின் அவசியத்தைச் சொன்னார். நான் பின்னர் உரையாற்றிய போது, அதைச் சொல்லியிருந் தேன். நாம் அரசமைப்பை உருவாக்கியபோது சொன்ன 3 விடயங்களை அவரும் தனது உரையில் சொல்லியி ருந்தார். அதனால் தொடக்கத்திலிருந்து மீண்டும் ஆரம்பிக்க வேண்டியதில்லை.

அண்மையில் பிரதமரைச் சந்தித்த போது, அவர்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது, நீங்கள் இதயசுத்தியுடன் செயற்பட்டு, ஜனநாயக அடிப்படையிலான - தமிழ் மக்களின் விருப்பங்களை நிறைவு செய்யக்கூடிய விதமாக - அரசமைப்பைத் தயாரித்தால், அதைப் பூர்த்தி செய்யவும், தயாரிக்கவும் எமது முழு ஆதரவையும் தரத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கிறேன் - என்றார்.

## 50 கிராம் ஹெரோயி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பறிமுதல் செய்யப்பட்ட ஹெரோயினின் பெறுமதி 10 லட்சம் ரூபாய்க்கும் மேல் இருக்கும் என்று மதிப்பிடப் படுகின்றது.

10 ஆயிரம் ரூபாய் பணத்திற்காக அரியாலையில் இருந்து பூம்புகாரிற்கு இந்த ஹெரோயினை எடுத்துச் சென்ற சமயம் சந்தேகநபரைத் தாம் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அரியாலை, நாவடியில் வைத்து சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். இன்று அவரை நீதிவான் மன்றில் முற்படுத்தியபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

வாகனத்தில் வந்த சிலர் அரியாலையில் வைத்து சந்தேக நபரிடம் ஹெரோயினைக் கொடுத்து விட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மூத்த காவல் அத்தியட்சகரின் கீழான புலனாய்வுக் காவலர்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

## யாழ்ப்பாணத்தை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரொரோண்டோவில் வாழ்பவரான 45 வயதான மதன் மகாலிங்கம் என்பவரே கொல்லப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமைமார்க்கத்தில் உயிராபத்தை ஏற்படுத்தும்காயங்களுடன்பொலிஸாரால் மீட்கப்பட்டபோதும் பின்னர் அவர் உயிரிழந்தார்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அறிவித்த ஜோர்க் பிராந்திய காவல்துறையினர் சாட்சிகள் யாராவது இருப்பின் தகவல் தருமாறு பொதுமக்களைக் கேட்டிருந்தனர். அவரது இறப்பில் சந்தேகம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் அவர் கொலை செய்யப்பட்டதாக யோர்க் பொலிஸார் இன்று அறிவித்துள்ளனர்.

மதன் மகாலிங்கம் யாழ்ப்பாணம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாக கொண்டவர் என தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணம், கம்பஹா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகலமாக (93) அமையும் என்றும் செயலகம் குறிப் பிட்டுள்ளது.

18 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கம்பஹா மாவட்டத்துக்கும் 7 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கும் ஒரே அளவு நீண்ட வாக்குச்சீட்டு என்பது குறிப்பிடத்தக்கது.

## போராளிகளையும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்படித் தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் போராளிகள் தமிழரசுக் கட்சியில் இணையவேண்டும் என்று ஒரு பிரேரணை கொழும்புக் கிளையில் முன்மொழியப்பட்டபோது அதற்கு ஆதரவு கொடுத்தது நான் ஒருவனே. அந்த நிலைப்பாட்டில்தான் நான் இப்போதும் உள்ளேன்.

எங்கள் இனத்தின் விடிவுக்காகப் போராடியவர்கள் ஒரு கால கட்டத்தில் ஒரு முறையைப் பயன்படுத்திப் போராடினார்கள். அந்த வடிவத்திலான போராட்டம் நிறைவுக்கு வந்துவிட்டது.

எந்த அர்ப்பணிப்போடு அவர்கள் அதைச் செய்தார்களோ அந்த அர்ப்பணிப்பு இப்போதும் கட்டாயம் அவர்களிடம் இருக்கும். இப்போது வேறு ஒரு வடிவத்தில் எங்கள் போராட்டம் முன்னெடுக்கப்படும்போது அவர்களுடைய பங்களிப்பு அத்தியாவசியமானது. அவர்களையும் இணைத்துக்கொண்டுதான் நாங்கள் செல்லவேண்டும். இதனை நான் ஆரம்ப காலம் தொட்டு வலியுறுத்தி வருகின்றேன் - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தலுக்குப் பின் அணி மாற இப்போதே தயாராக இருப்போர்

தேர்தல் முடிவுகளின் விளைவு என்னாகும் என்ற சிந்தனையுடன் தான் நாம் தேர்தலை அணுக வேண்டும்.

இந்த முறை தேர்தலைப் பொறுத்தவரை தென்னிலங்கை வெற்றி யாருக்கு என்பதில் சந்தேகம் இல்லை. எந்தளவில் வெற்றி என்பது தான் கேள்விக்குரியது.

தெற்கில் சிறிலங்கா பொதுஜனப் பெரமுனவின் (மொட்டுக் கட்சியின்) கொடி பறக்கும் என அதன் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கூறுவது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல.

ஆனால், அந்த வெற்றி எந்தளவுக்கு என்பதுதான் பிரதான கேள்வி.

இந்தப் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க வேண்டும் என்பதுதான் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் அவரது கட்சியினரதும் ஒரே எதிர்பார்ப்பு.

தனித்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை ஈட்டி அதன் மூலம் தம்மிஷ்டப்படி புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதுதான் ராஜபக்ஷக்களின் ஒரே திட்டம். வியூகம், எதிர்பார்ப்பு, முயற்சி எல்லாமுமே.

அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால், அதனால் இலங்கை நாட்டின் எதிர்கால ஜனநாயகத்துக்கு மட்டுல்லாமல், இந்தத் தீவின் சிறுபான்மையினரின் எதிர்காலமும் கேள்விக்கு உள்ளாகும்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தில் ஊறித் திளைத்து, அதனையே தமது அரசியலாக நடத்தி வரும் தரப்புகளின் கைகளில் நாட்டின் மியுயர் சட்டத்தையும் தம்மிஷ்டப்படி மாற்றியமைக்கும் அதிகாரம் கிட்டுமானால் விளைவுகளைச் சொல்ல வேண்டியதில்லை.

அத்தகைய சூழலில் சட்டமாக்கும் நாடாளுமன்றத்தில் பேரினவாதமே கோலோச்சும். சிறுபான்மையினரான தமிழர்களையும், முஸ்லிம்களையும் அவர்களின் பாரம்பரிய தாயகத்திலேயே அடக்கி, ஒடுக்கும் கொடூரம் அரச திட்டமாக சட்ட அங்கீகாரத்துடன் அரங்கேறும்.

இத்தகைய விபரீத நிலைமை ஏற்பட்டால் என்னவாகும் என்பதை ஒட்டி ஜே.வி.பி. வெளியிட்டிருக்கும் சில கருத்துகள் நோக்கற்பாலவை.

கடந்த 2010 ஆம் ஆண்டுத் தேர்தலில் போரை நிறைவு செய்து நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் 18 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ராஜபக்ஷ அரசு வெற்றி பெற்றது. அதையடுத்து உடனடியாக நடத்தப்பட் பொதுத் தேர்தலில் கூட அப்போதைய மஹிந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிட்டவில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த இருபது உறுப்பினர்களே கட்சி மாறி அப்போதைய அரசின் தேவைகளுக்கு ஏற்ப மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெற வழி செய்தனர்.

அதன் மூலம், ஏற்கனவே மேலும் ஜனநாயக மயப்படுத்தப்பட்ட அரமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் ஜனநாயகப் பண்புகள் வெட்டிக் குறைக்கப்பட்டு 18 ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

எதிரணியில் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீரங்கா, திகாம்பரம், பிரபா கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் உட்பட்ட முஸ்லிம் காங்கிரஸினர் எல்லோரும் குத்துக்கரணம் அடித்துத்தான் அப்போதைய மஹிந்தர் அரசு தனது ஆதிக்க வலிமையை மேலும் விஸ்தரித்து மேம்படுத்தும் விதத்திலான அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் நிறைவேற வழி செய்தனர் – என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது ஜே.வி.பி.

இன்றைய நிலையிலும் தேர்தலில் ஆளும் தரப்புக்குத் தனித்து மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிட்டுவார்கள் என்று நம்புவது துர்பலமே.

ஆனாலும் தேர்தல் முடிவின் பின்னர் குதிரையோட்டம் மூலம் அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சிந்தனை – நம்பிக்கை –எதிர்பார்ப்பு – ஆளும் தரப்புக்கு உண்டு என்பதும் மறுக்கற்பாலதல்ல.

அதனால் எதிரணிக் கட்சிகள் சரியானவர்களைத் தேர்ந்து அனுப்பாவிட்டால், அது மஹிந்தர் தரப்புக்கு – மொட்டுக் கட்சிக்கு – இரட்டை லாபமாகிவிடும். எனவே அவதானம் தேவை என்கின்றது ஜே.வி.பி.

இந்த அவதானம் தென்னிலங்கைக்கு மட்டுமல்ல, வடக்குக் கிழக்குக்கும் கூடப் பொருந்தும்.

2010 இல் மஹிந்த அரசு மூன்றிலிரண்டு பெறுவதற்கு வசதியாகக் கட்சி மாறி அணி சேர்ந்தவர்களில் கணிசமானோர் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

2018 இல் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடத்திய அரசியல் சதிப் புரட்சி காரணமாக 52 நாள்கள் மஹிந்தர் அரசு ஆட்சியில் இருந்தது. அப்போது தமிழர் தரப்பில் இருந்து வியாழேந்திரன் மஹிந்தர் பக்கம் குத்துக்கரணம் அடித்தார். இன்னும் பலர் ‘பல்டி’ அடிக்கத் தயாராகவிருந்தனர். சமய சந்தரப்பம் சரிவராததால் தவிர்த்துக் கொண்டனர் எனச் செய்திகள வெளியாகியிருந்தன.

அரசியல் காரணங்களினாலும், நிதி நெருக்குதல் போன்ற பிற அழுத்தங்களினாலும் ஆளும் தரப்புக்கு மாற வேண்டிய கட்டாயத்தில் அல்லது அந்த சிந்தனைப் போக்கில் இருக்கின்றவர்களை அல்லது இதுதான் தமக்கு கடைசி முறை என்று எண்ணக் கூடியவர்களை வடக்கு, கிழக்கிலிருந்து எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாம் தேர்ந்தெடுத்து அனுப்பினாலும், அவர்களும் கூட தேர்வானதும் கட்சி மாறும் ஆபத்துள்ளது.

எனவே, தமிழ் மக்கள் இம்முறை வாக்களிப்பதற்கு முன்னர் இது பற்றி எல்லாம் சிந்தித்து, இவற்றைக் கணக்கில் எடுத்துத்தான் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும். அது முக்கியமானது.

# சுகாதார விதிமுறைகளை மீறி நடக்கும் தேர்தல் பரப்புரைகள் மீது சட்ட நடவடிக்கை

## பொலிஸார் அறிவிப்பு

கொரோனா பெருந்தொற்றுத் தடுப்பு சுகாதார விதிமுறைகளை மீறும் தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்படும் என்று அறிவித்திருக்கிறது இலங்கைப் பொலிஸ்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.

சுகாதார பிரிவினால் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமையவே பொதுத் தேர்தல் பிரசார கூட்டங்களை முன்னெடுக்க அரசியல் கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பொதுத் தேர்தல் பரப்புரைகளின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதார விதிமுறைகள் தொடர்பாக சுகாதாரப் பிரிவு உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்த விதிமுறைகள் குறித்து பொலிஸ் தலைமையகத்திற்கும் சுகாதார பிரிவு அறிவித்துள்ளது. அதற்கமைய அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார பிரிவின் ஆலோசனைக்கமைய தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் மற்றும் கூட்டங்கள் இடம்பெறுகின்றதா என்பது தொடர்பாக பொலிஸார் அவதானமாக உள்ளனர்.

சுகாதார பிரிவினரின் விதிமுறைகளை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பொலிஸார் தயாராக இருக்கின்றனர் – என்று அவர் தெரிவித்தார்.

# அஞ்சல் பணியாளர்களின் கோரிக்கையில் ஒன்றை மட்டும் ஏற்க அமைச்சரவை முடிவு

## சனிக்கிழமைகளில் அஞ்சலகங்களை மூடுவதில் விடாப்பிடி

இலங்கையின் அஞ்சல்துறை பணியார்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர்களில் ஒருவரான அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதேநேரம், சனிக்கிழமைகளில் அஞ்சல் அலுவலகங்களைத் தற்காலிகமாக மூடும் தீர்மானத்தில் மாற்றமில்லை என்றும் அவர் கூறினார்.

சனிக்கிழமைகளில் அஞ்சல் அலுவலகங்களைத் தற்காலிகமாக மூடுவதற்கும், மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குவதை தவிர்ப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக. ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்கத்தினர் அறிவித்திருந்தனர்.

ஆட்சியாளர்களின் தீர்மானத்துக்கு எதிரான அவர்களின் முடிவு குறித்து அமைச்சர் பந்துல குணவர்தவுடன் தொழிற்சங்கத்தினர் நேற்று முன்தினம் நடத்திய பேச்சு இணக்கமின்றி நிறைவடைந்தது.

அது குறித்து நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தற்போது நாட்டில் நிலவும் பெரும் நிதி மற்றும் பொருதார பிரச்சினைக்கு மத்தியில், செலவுகளை மட்டுப்படுத்தாவிட்டால் நிலமை சிக்கலாகி விடும் என்பதனால், ஏதாவது ஒரு வகையில் பங்களிப்பு செய்யுமாறு அஞ்சல் துறையினரிடம் கோரப்பட்டதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எனினும், சனிக்கிழமைகளில் பணியாற்றுதல், மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்க வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளையும் தொழிற்சங்கத்தினர் வலியுறுத்தியதனால் பேச்சு வெற்றிபெறவில்லை என்றார் அமைச்சர். இதை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை ஊழியர்கள் இரண்டு கோரிக்கைகளில் ஒன்றை கைவிட வேண்டும் என்று தீர்மானித்தது.

அதனடிப்படையில் சனிக்கிழமைகளில் அஞ்சல் அலுவலகங்களுக்கு விடுமுறை வழங்கி, ஏனைய தினங்களில் மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்

# வழைச்சேனையை வந்தடைந்தது கதிர்காமப் பாதயாத்திரை இன்று







கதிர்காமக் கந்தன் திருவிழாவிற்காக திருகோணமலையில் இருந்து தொடங்கிய பாதையாத்திரைக் குழுவினர் 11ஆவது நாளான இன்று வியாழக்கிழமை மட்டக்களப்பு வாழைச்சேனையை வந்தடைந்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் நோயினால் கடந்த மாதம் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பித்த பாதயாத்திரை 24 மணித்தியாலங்களில் நிறுத்தப்பட்ட நிலையில் திருகோணமலையில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரை தடங்கல் இன்றித் தொடர்கின்றது.

கடந்த மாதம் 21ஆம் திகதி திருகோணமலையின் லங்கா பட்டினம் முருகன்கோவில் இருந்து பாதையாத்திரையை ஆரம்பித்த 35 பேர் கொண்ட குழு 11 நாட்கள் பின்னர் வாழைச்சேனை கயிலாய பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்துள்ளது.

15 வருடங்களாக இந்த பாதையாத்திரை தொடர்ந்து சென்றுள்ளதாகவும் ஜுலை 18ஆம் திகதி கதிர்காமத்தைச் சென்றடையத் திட்டமிட்டுள்ளதாகவும் குழுவினர் தெரிவித்தனர்.

## ராஜீவ் காந்தி கொலைக் வழக்கில் கைதாகி 30 ஆண்டுகள்

# முருகன் உட்பட 7 பேரதும் விடுதலையில் தமிழக ஆளுநர் செய்வது நியாயமற்றது

## டாக்டர் ராமதாஸ் கண்டனம்



இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைப்படுத்தப்பட்டுள்ள எழுவரையும் விடுதலை செய்வது தொடர்பாகப் பரிந்துரைக்குமாறு ஆளுநரைக் கோரி இன்றைக்கு ஆயிரத்து 7நாள்களாகி விட்டன. இன்னும் முடிவெடுக்க முடியவில்லை என்றால், அதற்கு 7 தமிழர்களும் விடுதலையாகி விடக் கூடாது என்ற எண்ணம் தான் காரணமாக இருக்க வேண்டும். ஆளுநர் என்ற உயர்ந்த பதவியில் இருப்பவர் சட்டத்தின் அடிப்படையில்தான் முடிவெடுக்க வேண்டுமே தவிர, வேறு காரணங்களின் அடிப்படையில் முடிவெடுக்கக் கூடாது. அது அறமாக இருக்காது என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார். இது தொடர்பாக அறிக்கை ஒன்றில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தவறுதலாகத் தண்டிக்கப்பட்ட பேரறிவாளன், அந்த வழக்கில் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்பட்டு இன்றுடன் 30ஆவது ஆண்டு தொடங்குகிறது. பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களை விடுதலை செய்ய உச்ச நீதிமன்றமே ஆணையிட்டும், அந்த விடயத்தில் தமிழக ஆளுநர் முடிவெடுக்க மறுப்பது கண்டிக்கத் தக்கதாகும்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாகப் பேரறிவாளனிடம் சிறிய விசாரணை நடத்த வேண்டி இருப்பதாக 29 ஆண்டுகளுக்கு முன் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு பேரறிவாளனின் பெற்றோரிடம் கூறியது. விசாரணை முடிவடைந்ததும் அடுத்த நாள் காலையில் பேரறிவாளனை அனுப்பி வைப்பதாக விசாரணை அதிகாரிகள் உறுதியளித்தனர்.

அதை ஏற்றுப் பேரறிவாளனை அவரது பெற்றோர் அனுப்பி வைத்தனர். விசாரணை என்று அழைத்துச் சென்ற அதிகாரிகள், அங்கு பேரறிவாளன் அளித்த வாக்குமூலத்தை திரித்து எழுதி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பொய்யாகச் சேர்த்தனர்.

இவ்வாறு தண்டனைக்குள்ளாக்கப்பட்ட பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்கள் விடயத்தில் முடிவெடுக்க வேண்டிய தமிழக ஆளுநர் எந்த மனிதநேயமும் இல்லாமல் அது குறித்த பரிந்துரையைக் கிடப்பில் போட்டுவிட்டுக் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறார். பேரறிவாளன் விடுதலை செய்யப்பட வேண்டியவர். பேரறிவாளன் அளித்த வாக்குமூலத்தைத் திரித்துப் பதிவுசெய்ததன் மூலம் அவருக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கத் தாம் காரணமாகி விட்டதாக வழக்கின் விசாரணை அதிகாரி தியாகராஜன் ஒப்புக்கொண்டதுடன், அதை உச்ச நீதிமன்றத்தில் மனுவாகவே தாக்கல் செய்திருக்கிறார்.

ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டை உருவாக்கியது யார்? என்பதை இன்னும் புலனாய்வு அமைப்புகள் கண்டு பிடிக்கவில்லை. இது தொடர்பாக உச்ச நீதிமன்றம் அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பினாலும் கூட, அதற்குப் புலனாய்வு அமைப்புகளால் பதில் கூற முடியவில்லை.

வெடிகுண்டு தயாரித்தவர்களே யார் என்று தெரியாத நிலையில், அதற்கு மின்கலம் வாங்கிக் கொடுத்தவர் என்று பேரறிவாளனைக் கைது செய்து 30 ஆண்டுகளாகச் சிறையில் அடைத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயமாகும்? என்றார்.

# பெலாரஸ் நாட்டை ஊடறுத்து ரஷ்யா சட்டவிரோதப் பயணம்

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாக ரஷ்யா தங்கள் நாட்டின் எல்லைகளை மூடியது. ஆனாலும் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் பெலாரஸ் வழியாகச் சட்டவிரோதமாகப் பயணிக்கின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ரஷ்யாவுடனான பெலாரஸின் எல்லை பல ஓட்டைகளைக் கொண்டது என்றும் எல்லையின் சில பகுதிகள் வழியாகப் பயணிக்கும்போது, எல்லைப் பொலிஸாரைத் தவிர்க்க முடியும் என்பதாலும் பலர் இவ்வாறு பயணிப்பதாக அறியப்படுகிறது.

அத்தோடு ரஷ்யாவைப் போலன்றிப் பொலரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாஜன்கோ பொலரஸில் எல்லைகளை மூடுவதற்கு உத்தரவிடவல்லை. கொரோனாவுக்குரிய தீர்வாக அவர் மதுபானங்களைப் பரிந்துரைக்கிறார் என்பதும் ரஷ்யாவிலிருந்து இவ்வாறு சட்டவிரோத பயணங்கள் தொடர்வதற்கு ஏதுவாகியுள்ளன. ரஷ்யாவின் எல்லைகள் மார்ச் மாதம் தொடக்கம் மூடப்பட்டிருந்தாலும், கார் மற்றும் சிறியரக வான் ஓட்டுநர்கள் ரஷ்ய மற்றும் பெலாரஸ் குடிமக்களுக்கு எல்லை தாண்டிய சேவைகளை மேற்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# இட்லிப் போர்நிறுத்தத்தை குலைப்பதற்கு முயற்சிகள்

## துருக்கி குற்றச்சாட்டு



சிரியாவின் வடமேற்குப் பிரதேசமான இட்லிப்பில் துருக்கி மற்றும் ரஷ்யாவால் எட்டப்பட்ட மூன்று மாத காலப் போர் நிறுத்தத்தை அங்குள்ள ஆயுதக் குழுக்கள் சீர்குலைப்பதற்கு முயற்சிக்கின்றன, ஆனாலும் அந்த ஒப்பந்தம் நீடிக்கிறது என்று துருக்கியின் பாதுகாப்பு அமைச்சர் ஹலுசி அகர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இட்லிப்பில் சில ஆயுதக் குழுக்கள் போர் நிறுத்தத்தை சீர்குலைக்க முயற்சித்தன, அதை மீறுகின்றன. ஆனால் நாங்கள் அது குறித்து எங்கள் ரஷ்ய நண்பர்களுடன் விவாதித்து வருகிறோம், அந்த ஒப்பந்தம் இன்னும் நீடிக்கிறது என்றார். சிரிய ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பல கிராமங்களில் திங்களன்று துருக்கி – ரஷ்யா சார்பில் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனப்படுகொலை வழக்கில் மியன்மருக்குக் கிடுக்கிப்பிடி



ரோஹிங்கியா முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராக மியன்மர் மேற்கொண்ட இனப்படுகொலை வழக்கைப் பன்னாட்டு நீதிமன்றத்தில் கொண்டுசேர்த்த வழக்கறிஞர்கள், மியன்மாரின் இராணுவ மற்றும் பொலிஸாரின் பதிவுகள் மற்றும் தகவல் தொடர்புகளைத் தருவதற்கு முகநூலுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொண்டனர்.

ரோஹிங்கியாக்களுக்கு எதிராக மியன்மர் இனப்படுகொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கை விசாரிப்பதற்குக் ஹேக்கை தளமாகக் கொண்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒப்புக் கொண்டதையடுத்து மியன்மருக்கு எதிரான இந்த வழக்கு முஸ்லிம் நாடுகளின் ஆதரவுடன் காம்பியாவால் கொண்டு வரப்பட்டது.

கொலம்பியா மாவட்டத்துக்கான அமெரிக்க நீதிமன்றத்தில் காம்பியா சார்பாகத் தாக்கல் செய்த ஒரு மனுவில், மியன்மர் இராணுவ அதிகாரிகளின் முகநூல் பக்கத்தில் வெளியிடப்பட்ட அனைத்து ஆவணங்களையும் தகவல்களையும் தருமாறு முகநூலிடம் கோரப்பட்டுள்ளது. காம்பியாவின் கோரிக்கை கிடைத்திருப்பதை முகநூல் உறுதிப்படுத்தியது. பொருந்தக் கூடிய சட்டங்களின்படி அதை மதிப்பீடு செய்யப்படும் என்றும் அது கூறியுள்ளது.

மியன்மார் முன்னெடுத்த இனப்படுகொலையை நிரூபிப்பதற்கு ரோஹிங்கியா இனக்குழுவை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அது அழித்தற்குரிய ஆதாரங்களை முன்வைக்க வேண்டும். இந்த வழக்கு விசாரணை முடியும் வரை ரோஹிங்கியா மக்களை இனப்படுகொலை மற்றும் பிற வன்முறைகளிலிருந்து பாதுகாப்பதற்கு அவசர நடவடிக்கைகள் எடுக்குமாறு உலக நீதிமன்ற நீதிபதிகள் மியான்மருக்கு உத்தரவிட்டுள்ளனர்.

# மற்றொரு ஏரியும் சிவந்தது! அதிர்ச்சியில் ஆய்வாளர்கள்





ரஷ்யாவில் மசகு எண்ணை கலந்ததில் அங்குள்ள ஆறு ஒன்று சிவப்பு நிறமாக மாறியது. இறுதியில் அந்த எண்ணையால் நன்னீர் ஏரி ஒன்று மாசடைந்தது. இந்த நிலையில் இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலம், புல்தானா மாவட்டத்தில் உள்ள லோனார் ஏரி திடீரெனச் சிவப்பு நிறமாக மாறியுள்ளது.

இது மக்களையும், வல்லுநர்களையும் வியப்பிலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. மும்பையிலிருந்து 500 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள புல்தானா மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த ஏரி 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் விண்கல் தாக்கத்தால் ஏற்பட்ட பள்ளத்தால் உருவானது என்று நிலவியல் வல்லுநர்களால் கூறப்பட்டு வருகிறது. இந்த நிலையில் வழக்கமாகப் பச்சை நிறத்தில் காணப்படும் இந்த ஏரி திடீரென இளம்சிவப்பு நிறமாகியுள்ளது. இதுகுறித்துப் புவியியல் வல்லுநர்கள் சிலர் கூறுகையில், 'லோனா ஏரியின் நிறம் மாறுவது புதிதல்ல. இதற்கு முன்பும் மாறியுள்ளது என்றாலும் இளம்சிவப்பு நிறத்தில் முழுமையாக மாறியது இதுதான் முதல்முறை. இந்த ஏரி உப்பு ஏரியாகும். இந்த நீரில் பி.எச் அளவு 10.5 சதவீதம் இருக்கிறது. மேலும் இந்த நீரில் இருக்கும் பாசிகள், மற்றும் உப்புத்தன்மையே நிறம் மாறுவதற்குக் காரணமாக இருக்கலாம். கடந்த சில ஆண்டுகளாக மழை குறைந்துவிட்டதால், லோனார் ஏரியில் நீரின் அளவும் குறைந்துவிட்டது. இதனால், மழைநீர் சேராததால் உப்பின் அளவு அதிகரித்து நிறம் மாறியிருக்கலாம். இதுதொடர்பாக ஆய்வு செய்து வருகிறோம். இது நீரில் நடக்கும் உயிரியல் மாற்றம்தான் என்றனர்.

# வடகொரியாவின் முடிவால் ஐ.நா. கவலை தெரிவிப்பு



தென் கொரியாவுடனான தொடர்புகளைத்துண்டித்துள்ளதாகவடகொரியா தெரிவித்துள்ளமை கவலையளிக்கின்றது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் அன்ரனியோ குத்ரெஸ் தெரிவித்தார். தவறான புரிதல்கள் அல்லது தவறான கணக்கீடுகளைத் தவிர்ப்பதற்குக் குறித்த தொடர்புமுறை அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தென்கொரியா இனி எங்களின் எதிரி என்று குறிப்பிட்டுத் தொன்கொரியாவின் எல்லைத் தொடர்புகளையும் அதனுடனான தொலைத்தொடர்பு இணைப்புகளையும் சில நாள்களுக்கு முன்னர் வடகொரியா துண்டித்திருந்தது. இந்தச் சம்பவத்துக்கே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் கவலை தெரிவித்தார்.

# நேதன்யாகுக்கு மோடி வாழ்த்து

கொரோனாத் தொற்றுக்குப் பின்னர் முதல்தடவையாக இந்தியா - இஸ்ரேல் நல்லுறவு குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாகப் பின்னர் மோடி வெளியிட்ட கீச்சகப் பதிவில், கொரோனாவுக்குப் பின் இந்தியா - இஸ்ரேல் நல்லுறவு குறித்து நண்பர் பெஞ்சமின் நேதன்யாகுவுடன் கலந்துரையாடினேன். 5ஆவது முறையாகப் பிரதமர் பதவி ஏற்றிருக்கும் அவருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்தேன் எனக் குறிப்பிட்டார்.



கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்துப் பல்வேறு நாட்டுத்தலைவர்களுடன்தொலைபேசி வாயிலா மோடி கடந்த சில மாதங்களாகக் கலந்துரையாடி வருகிறார்.

# இந்துக்களின் வீடுகள் இடித்தழிப்பு பாகிஸ்தானில் பரபரப்புச் சம்பவம்





பாகிஸ்தானின் தெற்குப் பஞ்சாபில் உள்ள பஹவால்பூர் மாவட்டத்தில் இந்துக்கள் செறிந்து வழும் பகுதி ஒன்றில் உள்ள 22 வீடுகள் தரைமட்டமாக்கப் பட்டன.

கடந்த மே மாதம் 20ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்துள்ளது. விதிகளை மீறி ஆக்கிரமிப்புச் செய்து குறித்த இடத்தில்அவர்கள்வசித்தனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், தாங்கள் சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவ்வாறு செய்துள்ளதாக இந்துச் சமூகத்தினர் கூறுகின்றனர்.

பாகிஸ்தானின் மனித உரிமைகள் ஆணையகம் இந்தச் சம்பவத்துக்குக்கண்டனம்தெரிவித்துள்ளது. சம்பவம் குறித்த உண்மை அறியும் குழுவில் இடம்பெற்றிருந்த மனித உரிமைகள் ஆணையகத்தின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் பைசல் மெஹ்மூத் இது குறித்துத் தெரிவிக்கும்போது பஹவால்பூர் மாவட்டத்தின் யாஸ்மன் நகரில் உள்ள இந்துக் குடியிருப்பில் 70 வீடுகள் இருந்தன. அரச நிலத்தில் பத்தாண்டுகளுக்கு முன்பு இந்த வீடுகள் கட்டப்பட்டன என்றார்.

சிறுபான்மை மக்கள் நலன் திட்டத்தின் கீழ் இந்த இடத்தைத் தங்களுக்கு ஒதுக்குமாறு பல ஆண்டுகளுக்கு முன்பு சம்பந்தப்பட்ட அரச துறைக்குக் குறித்த பகுதி வாழ் மக்கள் மனு அனுப்பியிருந்த நிலையிலேயே அவர்களின் குடியிருப்புகள் இடிக்கப்பட்டுள்ளன.

# பலே... பட்டதாரிகள்!



பாலஸ்தீனத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து தெற்குக் காசாப் பகுதியில் கோதுமைகளை அறுவடை செய்யும் வேலையில் குதித்தனர்.

பல்கலைக்கழகக் கற்கையைப் பூர்த்தி செய்துவிட்டு வேலைவாய்ப்பில்லாமல் தவித்த அவர்கள் தமது வாழ்வாதாரத்துக்காக இவ்வாறு குழுவாக வேலையில் இறங்கினர்.

அவர்கள் இயந்திரத்தைவிட ஐந்து மடங்கு வேகமாக அறுவடையில் ஈடுபட்டார்கள் என்று பன்னாட்டு ஊடகமான ரொய்ட்டர்ஸ் பாராட்டி செய்தி வரைந்துள்ளது.

பலஸ்தீனத்தில் வேலையின்மைப் பிரச்சினை உச்சமடைந்துள்ள நிலையில் தாங்கள் கற்ற கல்விமூலம் வேலைகள் கிடைக்காமல் விட்டதால் 40 பட்டதாரிகள் இணைந்து இந்த அறுவடைத் தொழிலைத் தொடங்கியுள்ளனர்.

அவர்கள் வாழும் பகுதியில் வேலைவாய்ப்பின்மை 50 சதவீதமாக இருக்கின்றது.

கடுமையான வெயிலுக்கு மத்தியில் தொப்பிகளை அணிந்து, இஸ்ரேலிய எல்லைக்கு அருகிலுள்ள தெற்கு காசாப் பகுதியிலேயே இவர்கள் இவ்வாறு கோதுமையை அறுவடை செய்தனர்.

நாங்கள் 2016ஆம் ஆண்டில் ஐந்து அல்லது ஆறு பட்டதாரிகளுடன்இந்தவேலையைத் தொடங்கினோம், இப்போது 40 ஆக உயர்ந்துள்ளோம் என்று பட்டதாரிகளில் ஒருவரான ஆலா அபு ரொய்ட்டரஸ் செய்தி நிறுவனத்திடம் தெரி வித்தார்.

உழவியந்திரங்களைப்பயன்படுத்தும்போது விவசாயிகளுக்கு 150 நிமிடங்கள் எடுக்கக்கூடிய ஒரு அறுவடைப் பரப்பை நாங்கள் 30 நிமிடங்களில் செய்து முடிக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். 31 வயதான அவர், 2009 இல் பட்டம் பெற்றதிலிருந்து படிப்புக்கேற்ற வேலை கிடைக்கவில்லை. இயந்திரத்தையும் விஞ்சிய இவர்களின் வேலைத் திறன் காரணமாக அந்தப் பகுதியில் இவர்களைக் 'கமாண்டோக்கள்' (தளபதிகள் ) என்று அழைக்கின்றனர் மக்கள்.

# தொல்பொருள் திணைக்களத்திற்குக் காணி சுவீகரிப்பதை எதிர்த்து இன்று ஆர்ப்பாட்டம்





**(எஸ்.கார்த்திகேசு)**

கிழக்கில் தொல்பொருள் திணைக்களம் காணி சுவீகரிப்பில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொத்துவிலில் இன்று போராட்டம் இடம்பெற்றது.

அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முகுதுமகா விகாரையை சுற்றியுள்ள சுமார் 72 ஏக்கர் காணியும் தொல்பொருள் பிரதேசத்திற்கு உரியது என்று தெரிவித்து அதனை நில அளவை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசு தலையீட்டு இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கண்ணீர்மல்கக் கோரிக்கை விடுத்தனர்.

பொத்துவில் பிரதேச செயலகத்தின் பிரதான வாயிலுக்கு முன்பாக பிரதான வீதியில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கைகளில் சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர். பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ்.அப்துல் வாசீ மற்றும் சபை உறுப்பினர் ஏ.எம்.எம். தாஜுதீன் மற்றும் அப்பகுதி குடியிருப்பாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் பிரதேசங்களைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணி ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து குறித்த பகுதிகள் நில அளவை செய்து வரப்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை பொத்துவில் மண்மலைப் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினர் நில அளவையில் ஈடுபட்டனர். 1965ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 30 ஏக்கர் 3 ரூட் 2 பேர்ச்சஸ் நிலத்தை அளவீடு செய்ய அதிகாரிகள் வருகை தந்திருந்தபோதும், பொத்துவில் முஹுது மஹா விகாரையின் முதலாம், இரண்டாம் விகாராதிபதிகள் 1956ஆம் ஆண்டு வர்த்தமானியின் பிரகாரம் 72 ஏக்கர் நிலத்தினை அளவீடு செய்யுமாறு அவர்களை வற்புறுத்தினர். இதையடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் அந்த 72 ஏக்கர் நிலத்தினையும் அளவீடு செய்துள்ளனர்.



குறித்த அளவீட்டின் போது பொத்துவில் முஹுது மஹா விகாரையின் இரண்டாம் நிலை விகாராதிபதி நில அளவைத் திணைக்கள அதிகாரிகளுடன் கூடச் சென்று பொதுமக்களின் வீட்டிற்குள் புகுந்து அவர்களை வெளியேறுமாறும் கூறி இது அவர்களது நிலம் என்றும் வளவினுள் காணப்பட்ட மரக்கன்றுகளை பிடுங்கி எரிந்துள்ளார் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மேலும் தெரிவித்தனர்

விகாரதிபதியின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்த அவர்கள், தங்களது நிலங்களை பறிக்க விட வேண்டாம் என்றும் தங்களுக்கான வாழும் உரிமையை பெற்றுத் தருமாறு கோரினர்.

“நாங்கள் பரம்பரை பரம்பரையாக இங்கு வாழ்ந்து வருகின்றோம். எமது நாட்டுக்குச் சொந்தமான தொல்லியல் பிரதேசத்தை நாங்கள் இவ்வளவு நாளும் பாதுகாத்து வந்துள்ளோம். நாங்களும் இந்த நாட்டுக்குரியவர்களே! இந்த நாட்டின் மீது முஸ்லீம்களாகிய நாங்களும் அன்பு வைத்துள்ளோம், வெறுமென இனவாத சிந்தனை கொண்ட கருத்துக்களை எங்கள் மீது பரப்பி முஹுது மஹா விகாரையிலுள்ள பௌத்த பிக்கு ஒருவர் அடாவடித்தனத்தில் ஈடுபட்டு வருகின்றார். இரவு நேரங்களில் கடற்படை வீரர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதனால் நிம்மதியிழந்து, தூக்கமின்றி வாழ்ந்து வருகின்றோம். இப்பகுதியில் வாழும் அனேகமானோர் விதவைகளே. தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமான 30 ஏக்கர் நிலத்தினை வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம் அதை விட்டு எங்களது வாழிடங்களையும் அபகரிக்க நினைப்பது எங்களது உரிமையினை மீறும் செயற்பாடாகும் என்று பொத்துவில் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikathir

எனது ஆசை

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளை (11/ 06/2020) தலைப்பு
எனது ஆசை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# ஆர்ப்பாட்டங்களை தடுக்க மாற்றுவழி

## ஜனாதிபதி ஆலோசனை

**கொழும்பு, ஜூன் 11**

**எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கலைப்பதற்கு தாக்குதல் நடத்தாது மாற்று வழிகளூடாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**



அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இன்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

முன்னிலை சோசலிசக் கட்சியினரால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்குப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் பந்துல குணவர்தன இதன்போது கூறினார்.

கொரோனா வைரஸ் ஒழிப்புக்குச் சமூக இடைவெளியைப் பேணுதல் கட்டாயமானதாகும் என்றும் இந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தை தடுப்பதற்குப் பொலிஸாரால் நீதிமன்ற தடையுத்தரவு பெற்றிருந்தபோதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டமையால் அதனை கலைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

கொரோனா ஒழிப்புக்கான கட்டாய நிபந்தனையாக சமூக இடைவெளியைப் பேணுதல் காணப்படுவதாகக் கூறிய அமைச்சர், ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றம் தடை பிறப்பித்துள்ளமையையும் மீறி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டபோது கலைந்து செல்லுமாறு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஆனாலும் ஆர்ப்பாட்டகாரர்கள் தொடர்ந்தும் அங்கு செயற்பட்டமையால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் மீதே முதலில் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டதாகவும் அதற்கான ஒளிப்பதிவு ஆதாரங்கள் காணப்படுவதாகவும் எதிர்த் தாக்குதலை பொலிஸார் மேற்கொண்டதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

தாக்குதலை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியோ, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களோ பொலிஸாருக்கு அனுமதி வழங்கியிருக்கவில்லை எனவும் சம்பவம் தொடர்பாக அரசு என்ற வகையில் கவலையடைவதாகவும் பந்துல குணவர்தன இதன்போது குறிப்பிட்டார்.

இந்நிலையில், இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமல் இருப்பதற்கு மாற்றுவழிகளைத் திட்டமிடுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் எனக் கூறிய அமைச்சர், கொரோனா ஒழிப்பிற்கான தனிமைப்படுத்தல் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய எதிர்ப்பில் ஈடுபடுவோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# சஜித் அணியின் வேட்பாளர் விலகி மஹிந்தவுக்கு ஆதரவு

கொழும்பு, ஜுன் 11

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்த வேட்பாளர் ஒருவர் போட்டியிலிருந்து விலகியதுடன் மகிந்த ராஜபக்ஷ அணிக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

காலி – பலப்பிட்டிய தொகுதியில் போட்டியிடும் டெனட் பனியன்தூவகே இவ்வாறு விலக்கியுள்ளார். இது குறித்து அவர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

தான் போட்டியிலிருந்து விலகுவது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தின் பிரதியை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அவரது முடிவு தெரிவிக்கப்பட்டதற்குப் பின்னர் அவர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் சந்தித்து பொது ஜன பெரமுனவுக்கான தனது ஆதரவைத் தெரிவித்தார் என்று பிரதமர் அலுவலக அறிக்கை கூறியது.

ஓய்வுபெற்ற இராணுவ மேஜரான பனியன்தூவகே, கட்சியில் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி காரணமாக இந்த முடிவை எடுத்தார் என்று தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி தொகுதி அமைப்பாளரான தான் விரும்பியபடி முடிவுகளை எடுக்க முடியும் என்று கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார் என்றும் ஆனால், கடந்த 9ஆம் திகதி நடந்த அமைப்பாளர்கள் கூட்டத்தில் தான் வெறுமனே ஒரு வேட்பாளராக மட்டுமே நடத்தப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து மாவட்ட அமைப்பாளரிடம் கேட்டபோது, இது கட்சியின் முடிவு என்று அவர் தெரிவித்தார். ஆக, சஜித் பிரேமதாச சரியான முடிவுகளை எடுப்பதாக எனக்குத் தெரியவில்லை அதனால் நான் போட்டியிலிருந்து விலகினேன். இத்தகைய தலைவர்கள் குறித்து நான் விசனமடைந்துள்ளேன். முதுகெலும்பில்லாத தலைவர்களுடன் இணைந்து அரசியல் செய்வதில் அர்த்தமில்லை என்றார் அவர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவும் போட்டியில் இருந்து விலகுவதாக நேற்று அறிவித்திருந்தார். அவரைத் தொடர்ந்து இரண்டாவது நபராக பனியனதூவவேயும் விலகியுள்ளார்.

## சாரதி அனுமதிப் பத்திரங்களை விரைவாக வழங்க நடவடிக்கை

சாரதி அனுமதிப் பத்திரங்களை விரை வாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

வேரஹெர பிரதான அலுவலகம் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களில் சாரதி அனுமதி பத்திரம் வெளியிடுதல் உட்பட சேவைகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.

அதற்கான திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு அந்த மாவட்டங்களின் அனைத்து பொறுப்பான அதிகாரிகளுக்கும் அறிவிக் கப்பட்டுள்ளது.

வேரஹெர மற்றும் கம்பஹா அலு வலகங்களில் சாரதி அனுமதி பத்திரத்திற்கான கோரிக்கை அதிகரித்துள்ளமையினால் பல பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் சுமித் அலஹகோன் தெரிவித்துள்ளார்.

அந்த நடவடிக்கைகளை வேகப்படுத் துவதற்காக சனிக்கிழமை மற்றும் ஞாயிற் றுக்கிழமை ஆகிய மேலதிக நேர கடமைகளை மேற்கொள்ளுமாறு தங்கள் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். கொரோனா வைரஸ் பரவல் காரண மாக மோட்டார் போக்குவரத்து திணைக் களம் தொடர்ந்து மட்டுப்படுத்திய சேவை வழங்குவதாக ஆணையாளம் நாயகம் குறிப்பிட்டார்.

## 6 மாங்களுக்கு கடன் வசூலிப்பு வேண்டாம்

### வலியுறுத்தி வலைப்பாட்டில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாகப் பொருளாதார ரீதியில் நலிந்திருக்கும் மக்களிடம் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கடன் வசூலிப்பை மீண்டும் தொடங்கியிருக்கும் நிலையில் அடுத்த 6 மாதங்களுக்கு கடன் அறவீடு மேற்கொள்ளப்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு கோரி கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பூநகரி, வலைப்பாடு பகுதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்க இளைஞர், பெண்களினால் போராட்டம் நடத்தப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த காலப் பகுதியில் கடன் அறவீடுகளை 6 மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு ஜனாதிபதியினால் அறிவுறுத்தப்பட்டிருந்தபோதும் கடன் அறிவீடுகள் இப்போதே தொடங்கிவிட்டன என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

கொரோனாவால் வாழ்வாதாரத்தை இழந்திருக்கும் மக்களிடம் கடனைத் திருப்பிச் செலுத்தும்படி நிர்பந்திப்பது அவர்களைத் தற்கொலைக்குத் தள்ளும் என்று அவர்கள் எச்சரித்தனர்.

## மட்டு. போதனா வைத்தியசாலைக்கு உடன் சிரிஸ்கானர் ஒன்று வேண்டும்




### ஆளுநரிடம் வைத்திய நிபுணர்கள் இன்று வலியுறுத்து

(க.விஜயரெத்தினம்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குப் புதிய சிரிஸ்கானர் இயந்திரம் ஒன்றைப் பெற்றுத்தரும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தித் தருமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜஹம்பத்திடம் மருத்துவ நிபுணர்கள் குழு வலியுறுத்தியது.

வைத்தியசாலையின் வைத்திய நிபுனர்கள் அடங்கிய குழு இன்று காலை மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் அவரைச் சந்தித்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை குறைகள் தொடர்பாகக் கலந்துரையாடியது.

வைத்தியசாலையில் பயன்பாட்டில் உள்ள மிகப் பழைய சிரிஸ்கானர்கூட இப்போது பழுதடைந்துவிட்டது. மூன்று வாரங்களுக்கும் மேலாக சிரிஸ்கான் வசதி இல்லாமலேயே வைத்தியசாலை இயங்குகின்றது.

சிரிஸ்கான் தேவைப்படும் நோயாளர்கள் அம்பாறை, கல்முனை வைத்தியசாலைகளுக்கே அனுப்பப்படுகின்றனர். ஒரு நாளைக்கு சிரிஸ்கான் வசதி தேவைப்படும் 16 முதல் 25 வரையான நோயாளர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வருகின்றபோதும் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக ஓர் அம்புலன்ஸில் 5 பேருக்கு மேல் அனுப்ப முடியாமை காரணமாகப் பெரும் சிக்கல் ஏற்படுகின்றது.

இதற்கு மேலாக விபத்தில் சிக்கிக் காயமடைபவர்களுக்குத் தேவையான சிரிஸ்கான்களைப் பெறமுடியாமல் உள்ளதால் உரிய சிகிச்சையை வழங்குவதிலும் சிக்கல் ஏற்படுகின்றது. இது நோயர்களின் உயிருக்கே ஆபத்தாகக்கூட முடியலாம்.

புதிய சிரிஸ்கேன் இயந்திரத்தைப் பெறுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் முழுமையடைந்தாலும் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்னும் கிடைக்காத காரணத்தால் அது கிடைக்காமல் இருக்கின்றது.

இந்த விடயத்தில் ஆளுநர் அக்கறை எடுத்து புதிய சிரிஸ்கானர் ஒன்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பொருத்தப்பட்டுள்ள புற்றுநோய்களுக்கான கதிர் இயக்க இயந்திரம் இதுவரை பயன்படுத்தப்படாமலேயே உள்ளது.

பல கோடி ரூபாய் செலவிட்டு உருவாக்கப்பட்ட இந்தப் புற்று நோய் பிரிவு பயன்தரும் நிலையில் இல்லை.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அறுபதிற்கு மேற்பட்ட வைத்திய நிபுனர்கள் இருக்கின்ற போதும் வைத்திய உபகரணங்கள் இயந்திரங்களின் தட்டுப்பாட்டினால் முழுமையான சிகிச்சையினை இங்கு வழங்க முடியாதிருக்கின்றது.



ஆகிய விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா, வைத்திய நிபுணர் சசிகலா, வைத்திய நிபுணர் சுந்தரேஸ்வரன், வைத்திய நிபுணர் சுரேசினி ராஜேந்திரம், வைத்திய நிபுணர் நிர்மல் ராஜ், வைத்திய நிபுணர் அருள் நிதி, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித வணிய சிங்ஹ, ஆளுநர் செயலாளர் பிரசன்ன மத நாயக ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வவுச்சர்களுக்குப் பதில் இனி பாடசாலைச் சீருடைத் துணி

### அமைச்சரவை அனுமதி

அடுத்த ஆண்டு முதல் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வவுச்சருக்குப் பதிலாக சீருடை துணியை வழுங்குவதற்கு ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

சீருடை துணி வழங்குவதற்காக கல்வி அமைச்சர் டலஸ் அழகப் பெருமவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு உற்பத்திகள் நிறுவனங்களை மாத்திரம் பயன்படுத்தி தயாரிக்கப்படும் சீருடைத் துணியையே மாணவர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 210 கோடி ரூபாய் பணம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அக்கறையற்று இழுபடுகிறது எழுவர் விடுதலை

கு.நெடுஞ்செழியன்



**இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 7பேர் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு இன்றுடன் 30 ஆண்டுகள் நிறைவடைந் துள்ளன. ஆனாலும் முடிவடையாத வழக்காக இந்த விவகாரம் நீடிக்கிறது.**

முப்பதாண்டு கால மனித உரிமைச் சிக்கல் அரசியல் விளையாட்டில் சிக்கித் தவிப்பதாக எண்ணத் தோன்றுகிறது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட எழுவரின் விடுதலை குறித்து 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதியன்று அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் அறிவித்த பிறகே இது அரசியல்மயப்பட்டது. மூவரின் தூக்குத் தண்டனை உத்தரவை மறுபரிசீலித்து, தண்டனையைக் குறைக்கக் கோரி, அரச தலைவருக்கு வேண்டுகோள் விடுத்துத் தீர்மானம் நிறை வேற்றியதோடு, எடுத்த முடிவை மூவர் சாவுத் தண் டனைக் குறைப்பு கோரிய வழக்கில் மனுவாகவும் தாக்கல் செய்தார். 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதியன்று மூவர் தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்தபோது குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 432இன் அடிப்படையில், உரிய அரச தண்டனைக் கழிவு குறித்துப் பரிசீலிக்கலாம் என்று தீர்ப்பு வந்தது. மறுநாள், மூவரோடு ஏற்கெனவே அதே வழக்கில் ஆயுள் சிறை அனுபவித்துவந்த நால்வரையும் சேர்த்து எழுவரையும் விடுவிப்பது என அமைச்சரவையில் முடிவெடுத்து அதைச் சட்டமன்றத்திலும் அறிவித்தார்.

‘நான் பேரறிவாளனின் தடா ஒப்புதல் வாக்குமூலத்தை முழுமையாகப் பதிவு செய்யத் தவறினேன். தனக்கு ராஜீவ் கொலைச் சதி குறித்து முன்கூட்டியே ஏதும் தெரியாது என்று அவர் சொன்ன உயிரான வரிகளை, வழக்கு விசாரணைப் போக்கைக் குலைத்துவிடும் எனக் கருதி பதிவுசெய்யாமல் விட்டுவிட்டேன்’ என விசாரணை அதிகாரி தியாகராஜன் பொதுவெளியில் சொன்னார். அது வரையில் ஒரு தாயின் கோரிக்கையாகவே கருதப்பட்ட அற்புதம்மாளின் குரல், மறுக்கப்பட்ட நீதிக்கானது என்று உணரப்பட்டது.

## முக்கிய திருப்பம்

இதற்கு முன்னர் வழக்கில் வேறு ஒரு முக்கிய திருப்பம் நிகழ்ந்திருந்தது. ‘நான் பேரறிவாளனின் தடா ஒப்புதல் வாக்குமூலத்தை முழுமையாகப் பதிவுசெய்யத் தவறினேன். தனக்கு ராஜீவ் கொலைச் சதி குறித்து முன்கூட்டியே ஏதும் தெரியாது என்று அவர் சொன்ன உயிரான வரிகளை, வழக்கு விசாரணைப் போக்கைக் குலைத்துவிடும் எனக் கருதி பதிவுசெய்யாமல் விட்டுவிட்டேன்’ என விசாரணை அதிகாரி தியாகராஜன் பொதுவெளியில் சொன்னார். அதுவரையில் ஒரு தாயின் கோரிக்கையாகவே கருதப்பட்ட அற்புதம்மாளின் குரல், மறுக்கப்பட்ட நீதிக்கானது என்று உணரப்பட்டது. தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி மறுவிசாரணை கோரி அறிக்கை வெளியிட்டார். இந்தத் திருப்பம்கூட ஜெயலலிதாவிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அதன் நீட்சியாகவே அற்புதம்மாளுடனான அவரது சந்திப்பு நடந்தது.

எழுவர் விடுதலை முடிவைக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் கீழ் இல்லாமல், மாநில அரசுக்கு அரசமைப்புச் சட்டக் கூறு 161இன்படி ஏன் எடுக்கவில்லை என்ற விமர்சனங்களும் உண்டு. இதைக் கருணாநிதியும் தனது அறிக்கைகளில் வெளிப்படுத்தினார். குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் கீழ் தண்டனைக் குறைப்புக் குறித்து ’உரிய அரசு’ பரிசீலிக்கலாம் என உச்ச நீதிமன்றமே வழிகாட்டியதால் ஜெயலலிதா அந்தப் பாதையைத் தெரிவு செய்திருக்கலாம். குற்ற விசாரணை முறைச் சட்டப் பிரிவு 435இல் மத்திய அரசின் ’கருத்து’ கேட்க வேண்டும் என்றே உள்ளது. எனவே, மத்திய அரசால் பெரிதாகத் தனது முடிவுக்கு இடையூறு ஏற்படுத்திவிட முடியாது என்ற சட்ட விளக்கம் அவருக்கு வழங்கப்பட்டதாலும் இருக்கலாம்.

## ஜெயலலிதாவின் தனி அக்கறை

எதுவாயினும், மூன்று நாள்களில் தனது முடிவை மத்திய அரசு தெரிவிக்கவில்லை எனில், தானே விடுவிக்கப்போவதாக ஜெயலலிதா அறிவித்த பின்னர் அனைத்துமே மாறிப்போயின. மாநில அரசின் கடிதத்துக்குப் பதில் சொல்லாமல், மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தை நாடி விடுதலைக்கு இடைக்காலத் தடையைப் பெற்றது. தான் எடுத்த முடிவுக்காகவும், மாநில அரசின் உரிமையை நிலைநாட்டவும் உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் ராகேஷ் திவிவேதியை அமர்த்தி இறுதிவரை போராடினார்.



அன்றைய காலகட்டத்தில் ஜெயலலிதாவின் நேரடிப் பார்வையில் உச்ச நீதிமன்றத்தில் நடந்துவந்த நீட், காவிரி, முல்லைப் பெரியாறு உள்ளிட்ட ஆறேழு முக்கிய வழக்குகளில் ஒன்றாக எழுவர் விடுதலை வழக்கும் இருந்தது.

இறுதியில், குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 435(1)இல் கூறப்பட்டுள்ள ’கலந்தாய்வு’ என்பதை ’ஒப்புதல்’ என்றே கொள்ள வேண்டும் என அரசமைப்புச் சட்ட அமர்வு 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2ஆம் திகதியன்று தீர்ப்பளித்தது. இந்தச் சட்டத்தின்படி, எழுவரையும் விடுவிப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் முடியாது என்றானது. தமிழக அரசின் கடிதம் தொடர்பில்



வேறு ஒரு மூவர் அமர்வு முடிவெடுக்கும் என நீதிமன்றம் அறிவித்தபோது, ஜெயலலிதாவின் முயற்சிக்கு முட்டுக்கட்டை நீடித்தது.

## தொடர் முயற்சி

இந்தத் தீர்ப்புக்குப் பிறகும் ஜெயலலிதா அமைதியாக இருக்கவில்லை. 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி மீண்டும் ஒரு கடிதத்தை மத்திய அரசுக்கு எழுதினார். 2016ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகும் எழுவர் விடுதலை விவகாரத்தில் ஆர்வம் செலுத்தினார். மத்திய அரசுக்குத் தொடர் அழுத்தங்கள் கொடுத்தார்.


## பழனிசாமி அக்கறை காட்டத் தவறிவிட்டார்

எழுவர் விடுதலையில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜெயலலிதாவுக்குப் பிறகு, முதல்வர் பொறுப்பில் இருக்கும் பழனிசாமி இந்த விடயத்தில் அக்கறை காட்டத் தவறிவிட்டார். அரசமைப்புச் சட்டக் கூறு 161இன்படி 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் திகதியன்று பேரறிவாளன் அளித்த விடுதலை கோரும் கருணை மனுவை மாநில அரசு பரிசீலிக்கலாம் என்று 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதியன்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

அந்த இறுதி விசாரணையில், ஜெயலலிதாவின் காலத்தைப் போல் இல்லாமல் தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் எவருமே முன்னிலையாகவில்லை. அடுத்த மூன்று நாள்களில் முதல்வர் தலைமையிலான அமைச்சரவை கூடி, எழுவரையும் விடுவிக்கப் பரிந்துரைத்து, கோப்புகளை ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பிவைத்தது.

2019ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் எழுவர் விடுதலை குறித்துப் பேசியது அ.தி.மு.க. கூறியவாறு கடந்த ஓராண்டு ஆட்சியில் இது குறித்து மத்திய அரசுக்கோ குடியரசுத் தலைவருக்கோ முதல்வர் அழுத்தம் கொடுக்கவில்லை. இதற்கிடையே, அற்புதம்மாளின் காத்திருப்பு 30ஆவது ஆண்டை எட்டியிருக்கிறது. எழுவர் விடுதலையில் இனியும் நாம் அரசியல் சாயம் பூச வேண்டாம். ஒரு தாயின் இடைவிடாத அலைக்கழிப்புக்கு இந்த ஆண்டிலாவது தீர்வு கிடைக்கட்டும்.

நன்றி – ‘தி ஹிந்து தமிழ்’



# தொல்லியல் ஜனாதிபதி செயலணிக்கு காரை தீவுப் பிரதேச சபையில் எதிர்ப்பு

## ஏகமனதான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது





**(சந்திரன் குமணன்)**

அம்பாறை, ஜூன் 11

கிழக்கில் தொல்பொருள் இடங்களை அடையாளம் கண்டு, பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணியின் நடவடிக்கைகளுக்கு எதிராக காரைதீவு பிரதேச சபையில் ஏகமதான தீர்மானம் இன்று நிறைவேற்றப்பட்டது.

இந்த ஜனாதிபதி செயலணி கையாளப்போகும் இடங்களாகத் தமிழர்களின் தாயகப் பகுதிகள் திட்டமிட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் நடவடிக்கை என்றும் சபை கண்டித்திருக்கின்றது. இந்த நடவடிக்கையை முற்றுமுழுதாக எதிர்ப்பது எனவும் அது தீர்மானித்திருக்கின்றது.

காரைதீவு பிரதேச சபையின் 28ஆவது மாதாந்த அமர்வு சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் வியாழக்கிழமை காலை 10 மணியளவில் சபையின் கூட்ட மண்டபத்தில் தொடங்கியது.

இந்தக் கூட்டத்திலேயே ஜனாதிபதி செயலணிக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்திற்கான வரைபை உறுப்பினர் ஏ.ஆர்.மொகமட் முன்வைத்தார்.

"தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் அனேகமாக எல்லாமே தமிழர்களின் பூர்வீக நிலங்கள். அதிலும் அம்பாறை மாவட்டத்தில்தான் அதிக இடங்கள் இவ்வாறு தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ளன. தமிழ் பேசும் சமூகத்தை திட்டமிட்ட முறையில் நசுக்க முனையும் அரசின் செயற்பாடே இது" என உறுப்பினர் ஏ.ஆர்.மொகமட் தனது உரையில் தெரிவித்தார்.

இலங்கையில் பதவி வகித்த ஜனாதிபதிகளும் இனிவரும் காலங்களில் வரப்போகும் ஜனாதிபதிகளும் தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்புகளை தொடர்ந்தும் செய்து கொண்டுதான் இருப்பார்கள் என்பதற்கு இது நல்லதொரு உதாரணம் என்றார் உறுப்பினர் இராசையா மோகன்.

30 வருட கால தமிழ் மக்களின் இருப்புக்காக போராடிய ஒரு இயக்கம் இன்று இல்லை என்ற நிலையில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் பல அடக்குமுறைகள் தோற்றம் பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் இடங்களை அடையாளம் கண்டு, அவற்றைப் பாதுகாப்பதற்கான செயலணி ஒன்றைக் கடந்த வாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வர்த்தமானி மூலம் அறிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவின் தலைமையில் அமைக்கப்பட்ட இந்தச் செயலணியின் அனைத்து உறுப்பினர்களும் சிங்களவர்களே.

மூவின மக்களும் கிட்டத்தட்ட சம அளவில் வாழும் கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த நடவடிக்கைக்கான செயலணியில் ஒரு தமிழர் அல்லது முஸ்லிம் கூட நியமிக்கப்படவில்லை.

இது பரந்தளவில் கண்டனங்களுக்கு உள்ளானது.

இந்த நிலையில் நேற்று இந்தச் செயலணியின் முதலாவது கூட்டம் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது. அதில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், கிழக்கில் உள்ள தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதற்கும் மீட்டுருவாக்கம் செய்வதற்குமான இந்தச் செயலணி அனைத்துச் சமூகத்தினருடனும் இணைந்து செயற்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே காரைதீவு பிரதேச சபையில் செயலணிக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானத்தின் பிரதி ஜனாதிபதிக்கு நாளை அனுப்பி வைக்கப்படும் என்று தவிசாளர் ஜெயசிறில் தெரிவித்தார்.



### கடலட்டை பிடிப்பதற்காக

# பருத்தித்துறையில் குவிந்த வெளிமாவட்ட மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

பருத்தித்துறையில் கடலட்டை பிடிப்பதற்காக மன்னார் மீனவர்கள் முகாமிட்டுள்ளனர்.

இன்று காலை அந்தப் பகுதிக்கு வாகனங்களில் வந்த மன்னார் மீனவர்கள் அட்டை பிடிப்பதற்கான முன்னாயத்தங்களில் ஈடுபட்டுள்ளனர்.

நாகர்கோவில் முதல் பருத்தித்துறை வரையான கடற்பகுதியில் அந்தப் பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களின் அனுமதியுடன் தென்பகுதி மீனவர்கள் கடலட்டை பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அவர்களின் சட்டவிரோதமான அட்டை பிடிப்பு முறையால் அந்தப் பகுதி தொழில் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

சட்டவிரோத அட்டை பிடிப்புக்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் போராட்டம் நடத்தியமை மற்றும் அட்டை பிடிக்கும் பருவ காலம் முடிந்த காரணத்தால் அவர்கள் அங்கிருந்து அகன்றனர்.

இந்த நிலையில் தற்போது மீளவும் பருத்தித்துறைக்கு அட்டைப் பிடிக்கும் தொழில் மேற்கொள்பவர்கள் வந்திறங்கியுள்ளனர். அட்டைகளை எரிப்பதற்கான 5 எரிக்குமிடங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. எரிப்பதற்காகப் பெருமளவு மட்டைகள் இறக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை கொட்டடி மீனவர் சங்கத்துடனான ஒப்பந்தத்துடனேயே தாம் அட்டை பிடிக்க வந்ததாக, அட்டை பிடிக்க வந்த ஒருவர் தெரிவித்தார்.

ஒரு படகுக்கு 50,000 ரூபா வீதம் 50 படகுகளில் அட்டை பிடிக்க, கடற்றொழிலாளர் சங்கத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.




# ஓட்டோ - மோ.சைக்கிள் விபத்தில் தூக்கி வீசப்பட்ட இளைஞர் இறப்பு

## கொட்டகலையில் நேற்று சம்பவம்

திம்புள்ள – பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை ரொசிட்டா பண்ணைக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் ஹட்டன் பகுதியைச் சேர்ந்த 28 வயதான மனோகரன் கணேஷ் என்பவரே உயிரிழந்துள்ளார்.

நண்பர் ஒருவரின் வீட்டில் நடைபெற்ற பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ் வில் கலந்து கொள்ள நேற்று (புதன்கிழமை) மாலை ஹட்டன் நோக்கி பயணிக்கையிலேயே அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

கொட்டகலை நகரிலிருந்து பயணித்த முச்சக்கரவண்டியொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, மோட்டார் சைக்கிளில் மோதியது என்று சாட்சிகள் தெரிவித்தனர். மோதிய வேகத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்ட கணேஷ் வீதியோரமிருந்த கல்லில் தலை அடிப்பட்டு படுகாயமடைந்தார்.

அவரை கொட்டகலை வைத்தியசாலைக்கு எடுத்து விரைந்தபோதும் வழியில் அவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.06.2020 இல் வெளியிடப்பெற்றது.